# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

*****

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

******

முறையீட்டு மனு எண்.56/2018/பே
ஆணை நாள்: 10–09–2018

**மேலாண்மை இயக்குநர்,**
**DSR.சன்ஸ் இந்தியா இன்ஜினீயர்ஸ் பிரைவேட் லிமிடெட்,**
**எண்.49, முதல் தளம், HIG,NH*1,**
**வள்ளல் எம்.ஜி.ஆர் தெரு,**
**மறைமலை நகர்,**
**காஞ்சிபுரம் மாவட்டம்–603209.** --முறையீட்டு மனுதாரர்.

1.செயல் அலுவலர்,
நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி,
காஞ்சிபுரம் மாவட்டம்.

**2.செயல் அலுவலர்,**
**இடைக்கழிநாடு பேரூராட்சி,**
**காஞ்சிபுரம் மாவட்டம்.** -- எதிர் மனுதாரர்கள்.

ஆணை.

காஞ்சிபுரம் மாவட்டம், மறைமலைநகர், எண்.49, வள்ளல் M.G.R. தெருவில் இயங்கும் DSR சன்ஸ் இந்தியா இன்ஜினீயர்ஸ் பிரைவேட் லிமிடெட் எனும் நிறுவனத்தாரின் 09.04.2018 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 11.04.2018ல் பெறப்பட்டு, முறையீட்டு மனு எண். 56/2018 என எண்ணிடப்பட்டு, முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், காஞ்சிபுரம் மாவட்டம், நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி, 1வது வார்டு, மகாலட்சுமி நகர் விரிவாக்கம் பகுதி, சதாசிவம் நகர் மற்றும் ஆதிபராசக்தி நகர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம், இடைக்கழிநாடு பேரூராட்சி, வார்டு எண்.6 ல் விளம்பூர் காசிபேட்டை சாலை மற்றும் வார்டு எண்.11 மாதிரி பள்ளம் சாலை மற்றும் கான்சாகிப் தோட்டம் சாலை ஆகிய பகுதிகளில் தார்ச்சாலை அமைக்கும் பணிகளுக்கு மேற்படி பேரூராட்சிகள் மூலம் கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் தங்களது நிறுவனமும் பங்கேற்றதாகவும், ஆனால் தங்களுக்கு மேற்படி சாலைப் பணிகள்

வழங்கப்படாமல், தங்களை விட அதிக விலைப்புள்ளி அளித்த வேறு நிறுவனத்திற்கு மேற்படி பணிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி இரு பேரூராட்சிகளிலும் ஒப்பந்தப் புள்ளி திறப்பது குறித்தான தகவல் தங்கள் நிறுவனத்தற்கு முறையாக தெரிவிக்கப்படவில்லை எனவும், நந்திவரம் பேரூராட்சியில் 12.12.2017ல் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படாமல் 14.12.2017ல் தான் திறக்கப்பட்டதாகவும் தெரிவித்து விசாரணை கோரி தனது மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளனர்.

இம்முறைமன்ற நடுவ 16.04.2018ம் நாளிட்ட அறிவிப்பாணையினைத் தொடர்ந்து, இடைக்கழிநாடு மற்றும் நந்திவரம்–கூடுவாஞ்சேரி பேரூராட்சி செயல் அலுவலர்கள், முறையே 04.05.2018 மற்றும் 08.06.2018 ஆகிய தேதிகளிலான விளக்க அறிக்கைகளில், முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ள பணிகளுக்கான ஒப்பந்தப் புள்ளியில் ஒவ்வொரு பணிக்கும் தலா மூன்று எண்ணிக்கையிலான ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டதாகவும், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கான தொழில் நுட்ப உறைகள் மட்டும் 12.12.2017ல் பிரிக்கப்பட்டு, பிரிக்கப்பட்ட உறைகள் அனைத்தும் பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களால் நியமிக்கப்பட்ட சீராய்வுக் குழுவினரால் காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் 14.12.2017ல் கூர்ந்தாய்வு பணி மேற்கொண்டதாகவும், ஒவ்வொரு ஒப்பந்தபுள்ளியிலும் மேற்படி நிறுவனம் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப தகுதி சரிபார்ப்பு பட்டியலில் குறிப்பிடப்படவேண்டிய விவரங்கள் சில வரிசைகளில் நிரப்பப்படாமல் இருந்ததால், மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் தொழில் நுட்ப தகுதி பெறவில்லை எனவும், இதன்பொருட்டு மேற்படி நிறுவனம் மூலம் அளிக்கப்பட்ட ஒப்பந்தவிலைப்புள்ளி உறை திறக்கப்படவில்லை என தெரிவித்துள்ளனர்.

இம்முறைமன்ற நடுவ 25.05.2018ம் நாளிட்ட அழைப்பாணையின்படி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீட்டு மனுதாரரின் சார்பில், 09.07.2018 நாளிட்ட நிறுவன அனுமதி கடிதத்துடன் ஆஜரான திரு. R. சங்கரநாராயணன், மேலாளர் மற்றும் திரு. D.S. ரவிக்குமார், உதவி மேலாளர் ஆகியோர் தங்களது வாக்குமூலத்தில், இடைக்கழி நாடு பேரூராட்சி, 6வது வார்டில் சாலை அமைக்கும் பணிக்கு கோரப்பட்ட ரூ.160.00 லட்சம் மதிப்பீட்டிலான ஒப்பந்தப்புள்ளிக்கு தங்களது நிறுவனம் திட்ட மதிப்பீட்டினைவிட குறைவான தொகையாக ரூ.1,38,31,122/–க்கு ஒப்பந்தப்புள்ளி கோரி மூடி முத்திரையிட்ட உறையினை பேரூராட்சி அலுவலகத்தில் நேரிலும், இணையதளம் மூலமாகவும் சமர்ப்பித்ததாகவும், மேற்படி ஒப்பந்தபுள்ளிகள் திறக்கப்படும்போது தங்களுக்கு அறிவிப்பு ஏதும் வழங்கவில்லை எனவும், 12.12.2017 ம் நாளிட்ட பேரூராட்சி கடிதத்தில், மேற்படி ஒப்பந்தபுள்ளி தொடர்பாக 14.12.2017ல் காஞ்சிபுரம் மண்டல் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் சீராய்வுக் குழுவினர் மூலம் கூர்ந்தாய்வு மேற்கொண்டதில், தொழில் நுட்ப தகுதி ஒப்பந்தப்புள்ளி உறையில் வரிசை எண் 5,10 மற்றும் 12க்கான ஆவணங்கள் தங்களால் சமர்ப்பிக்காததால் தொழில் நுட்ப தகுதி பெறாத தங்கள் நிறுவன ஒப்பந்தப்புள்ளி தங்களுக்கு கிடைக்கப்பெறவில்லை என தெரிவித்ததாகவும், தங்களால் மேற்படி விவரங்கள் உரிய படிவத்தில் குறிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படவில்லை எனவும், ஆனால் தனியே சம்பந்தப்பட்ட ஆவணங்கள் இணையதளம் மூலமாகவும், நேரில் வழங்கிய ஒப்பந்தப்புள்ளியிலும் குறிப்பிட்டிருந்ததாகவும் தெரிவித்துள்ளனர். ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் தேதி பேரூராட்சி மூலம் தங்களுக்கு தெரிவிக்கவில்லையெனவும், இணையதளம் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட ஒபபந்தப்புள்ளி இன்னும் திறக்கபடவில்லை என்பதையே காட்டுவதாகவும், ஒரு முன்னணி நிறுவனமான தங்களின் ஒப்பந்தபுள்ளியில் ஏதாவது விடுபட்டிருந்தால் நியாயமான முறையில்

கேட்டு பெற்று இருக்கலாம் எனவு, படிவத்தில் விவரங்கள் உரியவாறு குறிப்பிப்படவிலலை என்பதைத் தவிர பிற இனங்கள் அனைத்தும் சரியாகவே சமர்ப்பிக்கப்பட்டதாகவும், ஆனால் தங்கள் நிறுவனத்தினை விட 4.95 சதவீதம் உயர்ந்த தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி அளித்தவருக்கு பணி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இம்முறைமன்ற நடுவ 25.06.2018ம் நாளிட்ட அழைப்பாணையின்படி இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான இடைக்கழிநாடு பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி. கு.பிரேமலதா தனது வாக்குமூலத்தில், இடைக்கழிநாடு பேரூராட்சியில் 6வது மற்றும் 19 வது வார்டில் முறையே ரூ.160.00 லட்சம் மற்றும் ரூ.100.00 லட்சத்திற்கான பணிகள் மேற்கொள்ள 19.10.2017ல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டதாகவும், அதில் 12.12.2017 பிற்பகல் 3.00 மணி வரை ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படும் எனவும், 12.12.2017 அன்று 3.30 மணிக்கு அலுவலகத்தில் வருகை தந்துள்ள ஒப்பந்தக்காரர் முன்னிலையில் தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளி உறை திறக்கப்படும் என்ற விவரம் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் வரிசை எண்.6ல் முக்கியமான நிகழ்வுகள் என்ற தலைப்பில் 4வது இடமாக குறிப்பிட்டுள்ளது எனவும் மேற்படி ஒப்பந்தப்புள்ளி திறப்பில் மனுதாரரோ, அவரை சார்ந்தவர்கள் யாரும் கலந்து கொள்ளவில்லை எனவும், விதிகளின்படி, ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி குறிப்பிட்ட நேரத்தில் ஒப்பந்தக்காரர் யாரும் கலந்து கொள்ளவில்லை என்றாலும் குறிப்பிட்ட நாள் மற்றும் குறிப்பிட்ட நேரத்தில் ஒப்பந்தப்புள்ளிக்கான தொழில் நுட்ப தகுதி உறை பிரிக்கப்பட்டு, அவற்றினை பட்டியலிட்டு அதற்கென குறிப்பிட்டுள்ள படிவத்தில் பூர்த்தி செய்து, பேரூராட்சிகளின் இயக்குநரால் அமைக்கப்பட்ட உதவி இயக்குநர் தலைமையிலான கூர்ந்தாய்வுக் குழுவிற்கு பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்டதாகவும், மேற்படி கூர்ந்தாய்வுக் குழுவில் ஒப்பந்தக்காரர்கள் கலந்து கொள்ளவேண்டிய அவசியம் இல்லை எனவும், கூர்ந்தாய்வுக் குழுவின் மூலம் எடுக்கப்படும் முடிவுகளை ஒப்பந்தக்காரருக்கு தெரிவிப்பதாகவும் தெரிவித்து மேற்படி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிட்டுள்ள விவரத்திற்கான நகலினையும் இணைத்து சமர்ப்பித்துள்ளார். தொழில் நுட்ப தகுதி பெறாத ஒப்பந்தப்புள்ளிகளுக்கான விலைப்புள்ளி உறை திறக்கப்படுவதில்லை எனவும், எனவே இணையதளத்தில் திறக்கப்படாத நிலை குறித்தான தகவல்தான் இருக்கும் எனவும், முறையீட்டு மனுதாரர் இது சம்பந்தமாக கடிதம் அனுப்பியபின்னர் பேரூராட்சி மூலம் 12.12.2018ல் மேற்படி ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்ட விவரம் தெரிவித்ததாகவும், முறையீட்டு மனுதாரரின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப தகுதியுடையதாக இல்லை என்பதால் அவரின் விலைப்புள்ளி உறை திறக்கப்படவில்லை என தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

நந்திவரம்-கூடுவாஞ்சேரி பேரூராட்சியில் வெளியிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி தொடர்பாக, முறையீட்டு மனுதாரர் சார்பாக அளித்த 09.07.2018ம் நாளிட்ட வாக்குமூலத்தில், கூடுவாஞ்சேரி பேரூராட்சி வார்டு எண் 1ல் ரூ.150.00 லட்சம் மதிப்பீட்டிலான பணிக்கு கோரப்பட்ட ஒப்பந்தத்தில், தங்களது நிறுவனம் இணையதளம் மூலமாகவும், நேரடியாகவும் மேற்படி கலந்து கொண்டதாகவும், மேற்படி பணிக்கு தங்கள் நிறுவனம் மூலம் ரூ.1,26,14,325/-க்கு தொகை குறிப்பிட்டு ஒப்பந்த படிவங்கள் சமர்ப்பிக்கப்பட்டதாகவும், ஒப்பந்தப்புள்ளி பெற 12.12.2017 அன்று கடைசி நாள் என்பதால் அன்றைய தினம் ஒப்பந்தபுள்ளி, ஒப்பந்தக்காரர் முன்னிலையில் திறக்கப்படவேண்டும் எனவும், மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்ட தங்களுக்கு இது குறித்து தகவல் ஏதும் பேரூராட்சியால் அளிக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார். பேரூராட்சி செயல் அலுவலரின் 15.02.2018ம்

நாளிட்ட கடிதத்தின்படி தங்களது ஒப்பந்தப்புள்ளி பேரூராட்சிகளின் இயக்குநரால் அமைக்கப்பட்ட சீராய்வுக்குழு ஆய்வு செய்ததில் வரிசை எண்.6, மற்றும் 12 ஏ முதல் இ வயைிலான உள்ள ஆவணங்கள் முழுமையில்லாததால் தொழில் நுட்ப அங்கீகாரம் பெறப்படவில்லையெனவும், தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளி அங்கீகாரம் பெறப்படாத நிலையில் தங்களின் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தங்கள் நிறுவனம் மூலம் அளிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் மேற்படி படிவங்கள் பூர்த்தி செய்யப்படாமல் விடுபட்டதாகவும், 12.12.2017ல் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படாமல் 14.12.2017ல் திறக்கப்பட்டதால் அதற்கான அறிவிப்பு தங்களுக்கு வராததால் மேற்படி ஒப்பந்தப்புள்ளி திறப்பில் தங்களால் கலந்து கொள்ள இயலவில்லை எனவும், ஒப்பந்தபுள்ளி திறப்பு தள்ளிவைக்கப்பட்டது தொடர்பாக பேரூராட்சியின் அறிவிப்பு பலகை மூலமாகவோ, தங்கள் நிறுவனத்தினை சார்ந்தவர்கள் மூலமாகவோ, அல்லது தொலைபேசி மூலமாகவோ தெரிவிக்கவில்லையெனவும், திட்ட மதிப்பீட்டினை விட குறைவான தொகையினை அளித்த தங்கள் ஒப்பந்தப்புள்ளியினை நிராகரித்தும், மதிப்பீட்டுத் தொகையினை விட 4.95 சதவீதம் உயர்வாக ஒப்பந்தப்புள்ளி அளித்த நபருக்கு பணி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

09.07.2018ல் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான நந்திவரம்-கூடுவாஞ்சேரி பேரூராட்சி செயல் அலுவலர் திரு.த.குணசேகரன், தனது வாக்குமூலத்தில் மேற்படி பணிக்கான ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்த காலத்தில் திரு. ஆ.பொ.முனியாண்டி என்பவர் செயல் அலுவலராக இருந்ததாகவும், ஆவணங்களின் அடிப்படையில் முறையீட்டு மனுதாரரின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப தகுதி பெறாத காரணத்தினால் தகுதியற்றவையாக கருதப்பட்டு மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளுக்கான விலைப்புள்ளி உறை திறக்கப்படவில்லையெனவும், இணையதளத்திலும், நேரில் சமர்ப்பித்த உறைகளும் திறக்கப்பட்டு ஆய்வு மேற்கொண்டதாகவும், முறையீட்டு மனுதாரர் இது தொடர்பாக 15.02.2018ல் தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் கோரிய விவரங்களை 09.03.2018ல் அனுப்பிவைக்கப்பட்டதாகவும், ஒப்பந்தபுள்ளி அறிவிப்பில், ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பித்த இறுதி நாளன்று அப்போது இருக்கும் ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்ததாகவும், மேற்படி ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப உறை திறந்தபோது முறையீட்டு மனுதாரரை தவிர மூன்று ஒப்பந்தக்காரர்கள் ஆஜராகி இருந்தனர் எனவும் தெரிவித்து, அவ்வாறு ஆஜரானவர்களின் கையொப்பம் பெற்ற ஒளி நகலினையும் சமர்ப்பித்துள்ளார். விதிமுறைகளின்படி அனைத்தும் முறையாக கடைபிடிக்கப்பட்டு இறுதி செய்யப்பட்டதாகவும், பேரூராட்சிகளின் இயக்குநரின் ஆணையின்படி அமைக்கப்பட்ட, பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் தலைமையிலான கூர்ந்தாய்வுக் குழுவினரால் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் நந்திவரம்-கூடுவாஞ்சேரி பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

11.07.2018ம் நாளன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான நந்திவரம்-கூடுவாஞ்சேரி பேரூராட்சியின் முன்னாள் செயல் அலுவலரும், தற்போதைய குன்றத்தூர் பேரூராட்சி செயல் அலுவலருமான திரு ஆ.பொ.முனியாண்டி மேற்படி முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு தொடர்பாக தனது வாக்குமூலத்தில், மேற்படி பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்து, இறுதி செய்தது, அனைத்தும் தான் மேற்படி பேரூராட்சியில் செயல் அலுவலராக இருந்த காலத்தில்தான் நடந்ததெனவும், முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ள பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் பெற 12.12.2017 இறுதி நாள் எனவும்,

12.12.2017, பிற்பகல் 3.30 மணிக்கு, அப்போது இருக்கும் ஏலத்தில் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்ததாகவும், அதன் அடிப்படையில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள், அப்போது ஆஜரான ஒப்பந்ததாரர்களான திரு.வெங்கடேசன், திரு.புண்ணியகோடி, திரு.எம்.கே.பாலாஜி ஆகியோர் முன்னிலையில் தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளி உறை பிரிக்கப்பட்டதாகவும், ஆஜரான ஒப்பந்தக்காரர்களிடம் கையொப்பம் பெறப்பட்டதாகவும், பிரிக்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி உறைகள் பேரூராட்சிகளின் இயக்குநரால் நியமிக்கப்பட்ட கூர்நோக்கு சிறப்பு குழுவினருக்கு அனுப்பவைக்கப்பட்டதாகவும், மேற்படி குழுவினரால் முறையீட்டு மனுதாரரின் ஒப்பந்தப்புள்ளி சில குறைபாடுகளால் (SI.No 5,6,10,12 A to E) போன்ற இனங்களுக்கான விவரங்களை பூர்த்தி செய்யப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டி, அவர்களால் அந்த ஒப்பந்தப்புள்ளி தகுதியற்றதாக முடிவு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டதாகவும், தொழில் நுட்ப தகுதி பெறாத நபர்களின் விலைப்புள்ளி உறை பிரிக்கப்படமாட்டாது எனவும், தகுதியிழப்பு குறித்த பதிவுகள் ஏதும் இணையதளத்தில் செய்யப்படாததோடு தபால் மூலமாகவும் அனுப்பப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார். இணையதளத்தில் விலைப்புள்ளி உறை திறக்கப்படாததால், திறக்கப்படவில்லை என்ற குறிப்பினையே காட்டும் எனவும், தான் மேற்படி பேரூராட்சியில் பணியில் இருந்தவரை முறையீட்டு மனுதாரர் தன்னை நேரடியாகவோ, கடிதம் மூலமாகவோ இது தொடர்பாக அணுகவில்லை எனவும், திரு.வெங்கடேசன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி விதிகளின்படி தகுதி பெற்றிருந்ததால் இதனை பேரூராட்சி மன்றக் கூட்டத்தில் வைக்கப்பட்டு ஒப்புதல் பெற்று பணி ஆணை வழங்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, நந்திவரம்-கூடுவாஞ்சேரி மற்றும் இடைக்கழிநாடு பேரூராட்சி செயல் அலுவலர்களின் விளக்க அறிக்கை மற்றும் வாக்குமூலங்கள், முறையீட்டு மனுதாரரின் வாக்குமூலம், நந்திவரம்-கூடுவாஞ்சேரி பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலரின் வாக்குமூலம் ஆகியன பரிசீலிக்கப்பட்டன.

மேற்படி இரு பேரூராட்சிகள் மூலம் அறிவிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பிலேயே கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி பெறப்படுவதற்கான இறுதி நாள் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் திறப்பது தொடர்பான விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளமைக்கான ஆவணங்கள் சம்பந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நந்திவரம்-கூடுவாஞ்சேரி பேரூராட்சியில் முறையீட்டு மனுதாரரது வாக்குமூலத்தில் மேற்படி ஒப்பந்தப்புள்ளி 12.12,2017க்கு பதிலாக 14.12.2017ல் திறக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி பேரூராட்சி செயல் அலுவலர் மூலம் ஒப்பந்தப்புள்ளி 12.12.2017அன்றே அப்போது இருந்த ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டமைக்கான ஒப்பந்தக்காரர்களின் கையொப்பமிடப்பட்ட விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் முறையீட்டு மனுதாரர் தங்களின் வாக்குமூலத்தில் மேற்படி இரு பேரூராட்சிகளிலும் சமர்ப்பித்த ஒப்பந்தப்புள்ளிகளுக்கான தொழில் நுட்ப உறையில் (SI.No.5,6,10,12 A to E) விவரங்கள் தங்களால் பூர்த்தி செய்யவில்லை என்பதை உறுதி செய்துள்ளனர். மேலும் ஒப்பந்தபுள்ளிகளின் தொழில் நுட்ப உறைகள் பேரூராட்சி செயல் அலுவலர்கள் மூலம் திறக்கப்பட்டிருந்தாலும், இதற்கென பேரூராட்சிகளின் இயக்குநரால், காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் தலைமையிலான கூர்ந்தாய்வுக் குழுவினர் மூலம் பரிசீலிக்கப்பட்டு, முறையீட்டு மனுதாரரின் தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளி

தகுதியற்றது என தெரிவித்துள்ளதின் அடிப்படையிலேயே விலைப்புள்ளி உறை திறக்கப்படவில்லை எனவும், தொழில் நுட்ப தகுதி பெறாததால் இது விவரம் இணையதளத்திலும் பதிவேற்றம் செய்யவில்லை என பேரூராட்சிகளின் செயல் அலுவலர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே முறையீட்டு மனுதாரர் மேற்படி பணிகளுக்கான ஒப்பந்தம் அளித்ததில் விதிமுறைகளின்படி படிவங்களை பூர்த்தி செய்து ஒப்பந்தத்தினை சமர்ப்பிக்காததின் அடிப்படையில் பேரூராட்சிகளின் இயக்குநரால் அமைக்கப்பட்ட கூர்ந்தாய்வுக்குழுவினரால் நிராகரிக்கப்பட்டுள்ளது. இதில் செயல் அலுவலர்கள் மீது முறைகேடுகள் புகார் எதும் நிரூபிக்க போதிய ஆதாரங்கள் இல்லாத நிலையில் இப்பொருள் தொடர்பான நடவடிக்கைகளை இம்முறைமன்ற நடுவம் கைவிடப்படுவதென முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 10–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்பகள் முறைமன்ற நடுவர்.

'–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளர்.

பெறுநர்

1. மேலாண்மை இயக்குநர்,
DSR.சன்ஸ் இந்தியா இன்ஜினீயர்ஸ் பிரைவேட் லிமிடெட்,
எண்.49, முதல் தளம், HIG,NH-1,
வள்ளல் எம்.ஜி.ஆர் தெரு,
மறைமலை நகர்,
காஞ்சிபுரம் மாவட்டம்–603209.

2. செயல் அலுவலர்,
இடைக்கழிநாடு பேரூராட்சி,
காஞ்சிபுரம் மாவட்டம்.

3. செயல் அலுவலர்,
நந்திவரம்–கூடுவாஞ்சேரி பேரூராட்சி,
காஞ்சிபுரம் மாவட்டம்.

4. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
காஞ்சீபுரம் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
காஞ்சிபுரம்.